தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 59
தலைப்பு : ஜெயங்கொள்ளுகிறவன் - Overcomer
வேத வாசிப்பு : வெளிப்படுத்தல் 2:1-7

1. நம்முடைய விசுவாசமே - 1யோவான் 5:4
2. ஜெயங்கொள்ளுகிறவனுக்கு - வெளிப்படுத்தல் 2:7
3. ஜெயங்கொள்ளுகிறவன் - வெளிப்படுத்தல் 21:7




மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

**G-Pay & PhonePe - 9443558041**



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: Six Days of the Week

*Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV &*

***24 Hours Worldwide Twoc TV Channel***

YouTube : the word of christ






## THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 நவம்பர் -2024 கனி - 12


ஆசிரியருரை

## இக்கட்டிலும் வேதத்தைப் பற்றிக்கொண்ட தாவீது

**David, Who grabed the Scripture in His Trouble**



**ஜ**னங்கள் பொதுவாக இக்கட்டானநேரத்தில் கர்த்தரை மறந்துவிடுவார்கள். ஆனால் தாவீது சொல்கிறான்; "இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது, ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி" என்கிறான் (சங்.119:143). ஒருவனுக்கு மனமகிழ்ச்சி எப்பொழுது வரும்? அவனுடைய திருமணநாளில் அல்லது அவனுடைய பிறந்த நாளில், அல்லது அவனுடைய வெற்றியின் நாளில் மனமகிழ்ச்சியாயிருப்பான். தாவீதோ, இக்கட்டும் நெருக்கமும் உண்டான நாளிலே கர்த்தருடைய கற்பனைகள் அவனுடைய மனமகிழ்ச்சியாயிருந்தன. அப்படியானால் அவனுடைய முழுநம்பிக்கையும் கர்த்தருடைய கற்பனையின்மேல் இருந்தது. அது அவனை உற்சாகப்படுத்தினது, பெலப்படுத்தினது ஆகையால் சோர்ந்துபோன அவனுக்கு அது பெலன் தந்தது.

கர்த்தருடைய வார்த்தைகள் ஜீவனும் வல்லமையுள்ளதுமாயிருக்கிறது. மனமகிழ்ச்சியானால் உள்ளமும் இல்லமும் மகிழ்ச்சியாயிருக்கும். மனதே எல்லாவிதமான நோய்களுக்கும் காரணமாயிருக்கிறது. இந்த மனமகிழ்ச்சி யையுடைய தாவீதை நோக்கிப் பாருங்கள். அவன் எப்பொழுதும் மனமகிழ்ச்சி யோடே இருந்ததற்கான காரணம். அவருடைய கற்பனையின்மேல் தாகமாயிருந்தான்.

"தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்" என சங்கீதக்காரன் பாடுகிறான் (சங்.107:6). ஆபத்து நாளில் என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது உங்களை விடுவிப்பேன் என்று கர்த்தர் சொன்னபடியாக இஸ்ரவேலர் தங்களுடைய ஆபத்து நாளில் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள் அவர்களை கர்த்தர் அவர்களுடைய இக்கட்டுகளிலிருந்து விடுவித்தார். அநேகர் ஆபத்து நேரங்களில் தங்களுடைய உறவினர்களையும், நண்பர்களையும் நாடிப்போய் ஏமாற்றமடைந்து வீடுதிரும்புகின்றனர். கர்த்தர் சகல ஜனங்களையும் சகல தேசங்களையும் ஆளுகிறார். அவருடைய ஆளுகை சூரியன் உதிக்கிற திசை தொடங்கி சூரியன் அஸ்தமிக்கிற திசைவரைக்கும் உள்ளது. அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. அவர் உங்களைக் காண்கிற தேவனாக இருக்கிறார். உங்களுடைய வழியை அவர் அறிவார். உங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களையும் அவர் அறிகிறார். உங்களுக்கு வரும் உபத்திரவத்தையும், பாடுகளையும், பிரச்சனைகளையும் அறிகிறார்.

நீங்கள் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் நம்பி உங்களை அவருக்கும் அவருடைய வசனங்களுக்கும் ஒப்புக்கொடுக்கும்போது; கர்த்தர் உங்களை எல்லாவிதமான இக்கட்டுகளிலிருந்தும் விடுவிப்பார். தாவீதைப் போலவும், இஸ்ரவேலரைப்போலவும் இக்கட்டிலும் ஆபத்திலும் கர்த்தரை நோக்கிப்பாருங்கள்.

இக்கட்டைப்போல மற்றொன்று: நிந்தையும் அவமானமும். இவைகளையும் தாவீது சகித்தார். "நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டகற்றும்; நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன்" என்றான் (சங்.119:22). மனிதன் எதைவேண்டுமானாலும் சகித்துக்கொள்ளுவான் ஆனால் நிந்தையையும், அவமானத்தையும் சகிக்கமாட்டான். தாவீதோ இவைகளை என்னை விட்டு அகற்றும் என்று கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறான். நிந்தையும் அவமானமும் இரு பெரும் ஆயுதங்கள். இவைகள் மனிதனை கொஞ்சம் கொஞ்சமாக கொன்றுவிடும்.

அநேகர் இவ்விதமான நிந்தைக்குள்ளும் அவமானத்திற்குள்ளும் உட்படுத்தப்பட்டு அழிவை சந்திக்கிறார்கள். பெரிய பெரிய சினிமா நட்சத்திரங்கள் தீடீரென்று அவமானத்தை தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். சிலர் நாட்டைவிட்டும், வீட்டைவிட்டும் சென்று விடுகிறார்கள். சிலர் பைத்தியமாகி தாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் தெருக்களில் திரிகிறதை நாம் காண்கிறோம். இவர்கள் எல்லோருமே நிந்தையையும், அவமானத்தையும் சகிக்க முடியாமற்போனவர்கள். சிலர் இந்த விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் வந்தால்தானே தெரியும் வேதனை என்பார்கள். ஆம், ஒவ்வொருவருடைய கஷ்டங்கள் அவர்களுக்குத்தான் தெரியும். அதே நேரத்தில் இவ்விதமான நிந்தையையும் அவமானத்தையும் சகித்த தாவீதை நாம் பார்க்க வேண்டும். அவன் ராஜாவாயிருக்கும்போது சிலர் தாவீது மீது கற்களை எறிந்தார்கள். அப்பொழுது அவர்கள் எறியட்டும் இவ்விதமாக எறிய தேவன் அவர்களை அனுமதித்தார் என்று சொல்லி அந்த விதமான அவமானத்தை சகித்தார்.

ஏன், நம் ஆண்டவர் இயேசுவை நோக்கிப்பாருங்கள். பிறப்பு முதல் சிலுவை வரை அவருக்கு ஏற்பட்ட அவமானத்தை அவர் சகித்தார். "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12:2). அவர் பாடுபடுவதற்கு முன்பே அவருக்கு தேவனுடைய வலது பாரிசத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த சந்தோஷத்தின்பொருட்டு அவருக்கு ஏற்பட்ட அந்த அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார். அவரை உமிழ்ந்து துப்பினார்கள், குட்டினார்கள், முற்கிரீடத்தை அவருடைய சிரசில் சூட்டினார்கள். உம்மை அடித்தவன் யார் என்று சொல்லி கன்னத்தில் அறைந்தார்கள். நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று சொல்லி ஏளனம் செய்தார்கள். இத்தனை அவமானங்களையும் அவர் சகித்தார். அவருக்கு ஏற்பட்ட ஒரு அவமானம் கூட உங்களுக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது, நமக்கு ஏற்படும் சின்ன சின்ன அவமானங்களைக்கூட நம்மால் சகிக்க முடியாவிட்டால் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி? இயேசுவோடு சேர்ந்து பாடுகளை

அநுபவிக்கும்போது அவரோடு சேர்ந்து ஆளும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால் உங்களுக்கு வரும் பாடுகளிலும், நிந்தைகளிலும், அவமானத்திலும் இவ்விதமான விபரீதங்களை சகித்த இயேசுவை நினைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கு வரும் நிந்தைகளையும் அவமானத்தையும் ஜெயித்து கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக வாழமுடியும்.

தாவீது இத்தனை பாடுகள் வந்தும் அவன் விட்டுவிடாதிருந்தது எதுவென்றால்: வேதம். மனிதனுக்கு பிரச்சனை என்று வந்துவிட்டால் ஒன்று தனக்கு எதிரே இருக்கிறவர்களிடம் கோபம் கொள்ளுவான் அல்லது பொருட்களை எடுத்து நாசம்பண்ணுவான். ஆனால் தாவீதோ அப்படியல்ல; "துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை" என்கிறான் (சங்.119:61). பொருட்கள் காணாமற்போனாலோ அல்லது தொலைந்துபோனாலோ யாருக்குமே மனம் மிகவும் கஷ்டமாக இருக்கும். கஷ்டப்பட்ட பொருளை இப்படி கொள்ளையடித்து சென்றுவிட்டார்களே என்று சொல்லி மனம் படாத பாடுபடும்.

ஒருவேளை தேவன் இதை அனுமதித்துவிட்டாரே என்று சொல்லி தேவனை தூஷிக்கவும் செய்திடுவார்கள். தாவீதை துன்மார்க்கரின் கூட்டங்கள் கொள்ளையிட்டும் அவன் கர்த்தருடைய வேதத்தை மறக்காமல் அதை கைக்கொண்டிருக்கிறான். அந்த மாதிரியான வேளைகளிலும் அதை படித்திருக்கிறான் என்றே சொல்லவேண்டும். அநேகர் சந்தோஷமாக இருந்தால் வேதம் வாசிப்பார்கள் அல்லது சபைக்கு சென்றால் வேதம் வாசிப்பார்கள். வேதபாடசாலைகளுக்கு சென்றால் வேதம் வாசிப்பார்கள். தாவீது எல்லா சூழ்நிலையிலும் வேதத்தை பற்றிக்கொண்டவனாயிருந்தான். ஆகையால் கர்த்தர் தாவீதைக் குறித்து சொல்லும்போது என் தாசன் என்கிறார்.

மேலும், அவன் சொல்லும்போது; "ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" என்கிறான் (சங்.84:10). சங்கீதக்காரனுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருந்திருக்கிறது என்று பார்த்தீர்களா? அநேகர் பல்லாண்டு வாழவேண்டும் என நினைக்கின்றனர். அவ்விதமாக மற்றவர்களை ஆசீர்வதிக்கின்றனர். எவ்வளவு நாள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியம்.

ஆகையால் ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது என்கிறான். இதை எத்தனைபேர் விரும்புவார்கள். வேதத்தை நேசிக்கிறவர்களும், அதைக் கைக்கொள்ளுகிறவர்களும் இதை விரும்புவார்கள். கொஞ்சநாள் வாழ்ந்தாலும் அந்த புண்ணிவான் அநேகருக்கு நல்ல காரியங்களை செய்துவிட்டு போனான் என்பார்கள். அதே ஊரில் பொல்லாதவன் பல ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருப்பான் அவனைப்பார்த்து அல்லது அவனுக்கு தெரியாமலோ மற்றவர்களிடம் இவனுக்கு சாவு வரமாட்டேங்குது இவன் இருந்து நாட்டுக்கு என்ன பயன், வீட்டுக்கு என்ன பயன் என்பார்கள். ஆக அன்பானவர்களே, நாம் ஆயிரம் நாளை விரும்பாமல் கிடைத்திருக்கிற கொஞ்ச நாளிலே கர்த்தருடைய வசனத்தின்படி வாழ்ந்து சாட்சியுள்ளவர்களாக இருக்க விரும்புவோம்.

கொள்ளையடிக்கும் கூட்டத்தார்கள் கோடிக்கணக்கான பணத்தையும் பொருட் களையும் வைத்திருப்பார்கள். அவர்களோடிருந்தால் ஒன்றுக்கும் கவலையில்லை என்பார்கள். துன்மார்க்கரோடு இருக்கவும் அப்படிப்பட்டவர்களோடு அநேகர் ஐக்கியம் கொள்ளவும் ஒன்றிற்கும் குறைவில்லாமல் வாழவும் விரும்புவார்கள். தாவீதோ ஆகாமியக்கூடாரங்களில் வாசமாயிருக்கவிரும்பவில்லை; தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொண்டான். அப்படியானால் அவன் ஒவ்வொருமுறையும் தேவனுடைய ஆலோசனையைப் பெற்று வழிநடந்தான். தன்னுடைய யோசனையினால் அவன் ஒன்றையும் செய்யவில்லை. கர்த்தருடைய சமுகத்தில் நித்தம் விழிந்திருந்து ஆலோசனை களைப் பெற்றுக்கொண்டான். இயேசு சொல்கிறார் நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் என்ற. இந்த வாசலை தாவீது அவருடைய நாட்களிலே தெரிந்துகொண்டு, கர்த்தருடைய வாசலிலே காத்திருந்தான். அவருடைய ஆலோசனைக்காக. இன்றைக்கு எத்தனைபேர் கர்த்தருடைய வேதத்தின்படியான வாழ்க்கையை துவங்குகிறார்கள்.

தேவனை அறியாதவர்கள் ஜோசியத்தை நம்புகிறார்கள். தேவனை ஏற்றுக்கொண்டவர்கள், சாஸ்திரத்தை நம்புகிறார்கள். இது எத்தனை வேதனையான காரியமாயிருக்கிறது! கல்லினிடத்திலும், மரத்தினிடத்திலும் ஆலோசனை கேட்கிறார்கள். தேவன் தம்முடைய வார்த்தைகளை என்றும் அழியாத வார்த்தைகளாக எழுதிகொடுத்திருக்கிறார். தேவவசனத்தை சொல்லும் போதகனையும் அவர்கள் மதிப்பதில்லை, கர்த்தருடைய வார்த்தையையும் மதிப்பதில்லை. எவ்வளவு தூரம் தேவனுக்கு விரோதமாக செயல்படமுடியுமோ அவ்வளவு தூரம் செயல்படுகிறார்கள். தாவீது தன்னுடைய ஜீவிய நாட்களில் தன்னுடைய பாவத்தை கர்த்தரிடம் அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டான். எந்நாளும் வேதத்தை பற்றிக்கொண்டு நடந்தான். இக்கட்டிலும், நெருக்கத்திலும், நிந்தையையும், அவமானத்தையும் எண்ணாமல் வேதத்தை நேசித்து அதைப்பற்றிக்கொண்டான். இச்செய்தியை வாசிக்கும் சகோதரனே சகோதரியே, உன்னுடைய வாழ்க்கையில் வரக்கூடிய இப்படிப்பட்டதான பாடுகளிலும் தாவீதைப்போல வேதத்தைப் பற்றிக்கொள். அப்பொழுது தாவீதோடு இருந்த கர்த்தர் உம்மோடும் எந்நாளும் இருப்பார்.

**தாவீது ஒருபோதும் கர்த்தருடைய கட்டளைகளை மறக்காதவனாயிருந்தானா?**

ஆம், "நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்" என்கிறான் (சங்.119:93). தம்முடைய வசனத்தினாலே உயிர்ப்பித்த ஆண்டவருடைய கட்டளைகளை மறக்கமாட்டேன் என்றான். உயிர்கொடுத்த ஆண்டவர் இயேசுவை நீங்கள் மறக்கலாமா? உங்களுக்காக சிலுவையில் அவர் இரத்தம் சிந்தினார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். கர்த்தருடைய வசனம் ஒருவனை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் காக்கிறது. அவர் சொல்ல அது அப்படியே நடந்தது. அவ்வசனங்கள் உங்களை நித்தியத்திற்கு கொண்டுசெல்லும். வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அதை ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அவன் உயிரடைகிறான். அவனுடைய ஆவி ஆத்துமா சரீரம் காக்கப்படும். தேவனுடைய பார்வையில் குற்றமற்றதாயிருக்கும். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? நீங்கள் உயிர்ப்பிக்கப்படத்தக்கதாக கர்த்தருடைய வசனத்திற்கு ஒப்பக்கொடுங்கள்.




# வசனத்தை சரியாகப் பகுத்தல்

**Rightly Dividing the Word**

*J.C.Choate*

அநேகர் வேதாகமத்தை வாசிக்கும்போது குழப்பமடைந்துள்ளனர். ஏனென்றால் அவர்கள் ஏதோ ஒரு புத்தகம், அத்தியாயம் மற்றும் வசனம் போன்றவற்றை படிக்க வேதாகமத்தை திறக்கலாம் அதன்பின் தேவன் தங்களோடு தனிப்பட்ட விதத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் என நினைக்கின்றனர். இப்படிச் செய்வதினால், அவர்கள் தேவன் தங்களை ஒரு திடமான பெட்டியைக் கட்டும்படி, மிருக பலி செலுத்தும்படி அல்லது வருடத்திற்கு ஒருமுறை எருசலேமுக்குச் சென்று தொழுதுகொள்ளும்படி விரும்புகிறார் என முடிவெடுக்கலாம். மற்றவர்கள் தாங்கள் ஓய்வுநாளில் தொழுதுகொள்ள வேண்டும் என நம்புகின்றனர், தங்களுடைய வருமானத்தில் 1/10 பங்கு கொடுக்கின்றனர், மேலும் "பத்துக்கட்டளைகளை" கைக்கொள்கின்றனர். நிச்சயமாகவே, அவர்கள் வசனத்தைச் சரியாகப் பகுத்துப் படிக்காததே அவர்களுடைய பிரச்சனையாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15) என்றார். ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிய விரும்பினால், அவருடைய வசனத்தைக் கண்டிப்பாக படிக்க வேண்டியிருக்கிறது, ஆனால் ஒருவன் வேதாகமத்தை படிக்காமல், தொடர்ந்து குழப்பத்திலும் என்ன செய்வதென்று அறியாமலு மிருக்கலாம். பவுல் சொல்லுகிறபடி, வசனத்தைப் நிதானமாய்ப் பகுத்துப்படிப்பதே இதற்கான விடையாயிருக்கிறது. ஆனால் அவன் என்ன புரிந்துகொள்கிறான்?

வேதாகமம் 15 நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கண்டிப்பாக வேதாகமத்திலுள்ள அனைத்தும் நேரடியாக உங்களுக்கும், எனக்கும், எழுதப்பட்டிருக்கவில்லை என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே, "நிதானமாய்ப் பகுத்து" எழுதப்பட்ட இந்த கருத்தினை நாம் ஆழ்ந்து நோக்குவோமாக.

இதை ஆராய, "வேதாகமம்" என்ற பதத்தின் பொருள் "புத்தகம்" அல்லது "புத்தகங்களின் புத்தகம்" என்பதை அறிய வேண்டும். பொதுவாக வேதாகமம் தனித்தனியான 66 புத்தங்களை உள்ளடக்கியது. இது இரண்டு பெரிய பிரிவுகளாக, அதாவது "பழைய ஏற்பாடு" மற்றும் "புதியஏற்பாடு" என்று பிரிக்கப் பட்டுள்ளது. இரண்டு பெரிய காலக்கட்டத்தைக் கொண்ட 39 புத்தகங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ளது. முதலாவது காலம் "முற்பிதாக்களின் காலம்" என அழைக்கப்படுவதோடு ஆதாம் மற்றும் ஏவாளில் தொடங்கி மோசே வரைக்கும் 25 நூற்றாண்டுகள் ஆகும். இக்காலக்கட்டத்தின்போது தேவன் தமக்குக் கீழ்ப்படிந்திருந்த கோத்திரங்களின் முற்பிதாக்களோடு நேரடியாகப் பேசினார்.

அப்போது தேவனிடமிருந்து எழுதப்பட்ட கட்டளை இல்லை. "இந்தக் கால" வரலாறு ஆதியாகம புத்தகத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது காலம் "மோசேயின் காலம்" என அழைக்கப்படுகிறது. இது மோசேயின் காலத்திலிருந்து கிறிஸ்துவின் மரணம் வரைக்கும் 1500 வருடங்களைக் கொண்டது. இந்த காலத்தில் தேவனுடைய ஜனங்கள் இஸ்ரவேல் ஜனங்கள், ஆபிரகாமின் முற்பிதாக்கள் - மோசே மூலம் தேவன் கொடுத்த கட்டளையின் மூலம் ஆளுகை செய்யப்பட்டனர். அந்த ஜனங்களை தெரிந்தெடுப்பதற்கும் கட்டளையையும் கூட கொடுப்பதற்கும் காரணம், தேவனுடைய குமாரனின் பிறப்பிற்காக ஒரு வழியை ஆயத்தப்படுத்தவே.

மூன்றாவதும் கடைசியானதுமான காலம் "கிறிஸ்வர்களின் காலம்" கிறிஸ்துவின் மரண நாளிலிருந்து மேலும் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டதின்படி அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் ஆரம்ப காலமாகும். இந்தக் காலம் அவர் மீண்டும் வரும் வரை தொடரும். காலம் நிறைவேறும் போது அவர் தமது சபையை அவர் ஆயத்தம்பண்ணும்படி சென்ற அந்த நித்திய உலகத்திற்குள் ஏற்றுக்கொள்வார் (யோவா.14:1-3).

நாம் இப்போது முற்பிதாக்களின் காலத்தில் அல்லது கிறிஸ்துவின் மரணத்தோடு முடிவுபெற்ற மோசேயின் கட்டளைக்குக் கீழாகவும் வாழவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மிஞ்சியிருப்பது ஒரே ஒரு காலக்கட்டம் அல்லது காலம் - அது கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழான கிறிஸ்தவர் காலம் - ஏனென்றால் நாம் இந்த காலத்தில் வாழ்கிறோம் மற்றும் நாம் கண்டிப்பாக கைக்கொள்ள வேண்டிய கட்டளையும் இதுவே.

நாம் முற்பிதாக்களின் காலம் அல்லது மோசேயின் காலத்தில் வாழ்ந்துகொண்டிராதபடியினால், அந்த கட்டளைகள் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கவில்லை! அது நியாயமில்லையா? நிச்சயமாக அது நியாயமே. எனவே, உதாரணத்திற்கு பழைய ஏற்பாட்டினையும், அதன் வரலாற்றினையும் நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ளும்போது அது நமக்கு விலையேறப் பெற்றதாயிருக்கும். ஆனால் தேவன் அந்தக் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்படி விரும்பவில்லை.

இக்குறிப்பிற்கு, நாம் "வசனத்தை நிதானமாய்ப் பகுத்திருக்கிறோம்" இப்போது நாம் கிறிஸ்தவர்கள் காலத்தில் வாழ்கிறபடியால், இது நாம் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் என்பது நியாயமானதாயிருக்கிறது. நாம் மிருக பலி பற்றி அல்லது ஒரு திடமான பெட்டியைக் கட்டுவது பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை - அந்தக் கட்டளைகள் மற்ற ஜனங்களுக்கு வேறு காலங்களில் கொடுக்கப்பட்டது! ஆனால் நமது கடமை கிறிஸ்துவின் கட்டளையைக் கைக்கொள்வது மட்டுமே! இது எளிதானது இல்லையா?

ஒரு நியாயமான தொகுப்பின் கேள்விகள் புதிய ஏற்பாட்டினை நாம் நிதானமாய் பகுத்து படிக்க நமக்கு உதவியாயிருக்கும். **முதலாவது,** பேச்சாளர் யார்? இது தேவனா, சாத்தானா, சில வேதாகம கதாபாத்திரங்களா, அல்லது மற்ற நபரா? **இரண்டாவது,** அவர் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்? அவிசுவாசியுடனா, கிறிஸ்தவர்களுடனா, பொது ஜனங்களுடனா, அல்லது குறிப்பிட்ட நபருடனா? **மூன்றாவது,** இது எப்பொழுது பேசப்பட்டது? துவக்க

சபையின் ஸ்தாபன இடத்திற்கு (பேசப்பட்ட வார்த்தையை உறுதிசெய்யும்படிக்கு அற்புதங்களைச் செய்த நிகழ்ச்சியில் இருந்தது போல்) அல்லது அனைத்து கிறிஸ்தவர்களின் காலத்திற்கு மட்டுமா? **நான்காவது,** இது ஏன் பேசப்பட்டது? தேவன் சில குறிப்பிட்ட சத்தியம் அல்லது வழிநடத்துதல்கள் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது ஸ்தாபனம் அல்லது நபர் போன்றோருக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தாரா?

கண்டிப்பாக, இப்போதே நீங்கள் தேவன் உங்களுடன் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசிக்கொண்டிருக்கிறாரா அல்லது யாரோ ஒருவருடைய செய்தியின் மூலமா என்று கண்டுபிடிக்க ஆரம்பிக்கின்றீர்கள். இக்கேள்வி களுக்கான பதில்கள் தேவன் நீங்கள் செய்யும்படி எதை விரும்புகிறார், அதை எப்படி செய்யவேண்டும், அதை எப்போது செய்யவேண்டும் என அறிந்துகொள்ள இது உங்களுக்கு ஏதுவாகயிருக்கும்.

உங்களுடைய கற்றுக்கொள்ளுதலில் உங்களுக்கு உதவிட வசன விளக்கவுரைக்கு நீங்கள் ஒரு வேதாகம அகராதியைப் பெற்றுக்கொள்ளலாம், ஒரு ஒத்த வாக்கிய வேதாகமம் அதிகமானவற்றை பட்டியலிடும் அல்லது நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிற பாடப்பகுதியின் வசனங்கள் எல்லாவற்றையும் கூட; நீங்கள் வியாக்கியானங்கள், மற்ற புத்தகங்கள் மற்றும் இது சம்பந்தப்பட்ட மற்ற பொருட்கள் போன்றவற்றின் அடிப்படையில் இப்பகுதிகளையும் வேதவாக்கியங்களையும் விவாதித்துக் கொள்ள முடியும். இப்போது, நீங்கள் வேதாகமத்தை வாசித்துக் கற்றுக்கொள்ளும்போது, மேற்குறிப்பிடப்பட்ட எல்லாவற்றையும் மனதில் கொண்டு, நீங்கள் மிக எளிதாக தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளலாம். நீங்கள் கற்றுக்கொள்கையில், நீங்கள் சத்தியத்தை அறிவதற்கு தாகமுள்ளவராக நீங்கள் கண்டிப்பாக ஜெபத்துடன் இருப்பீர்கள் மேலும் நீங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்தை ஏற்றுக் கொள்வீர்கள், இது உங்களை என்ன ஆலோசிக்கச் செய்கிறது என்பது பற்றி ஒன்றுமில்லை.

சாத்தானும் அவனுடைய வேலையாட்களும் எல்லாவகையான தடுக்கலையும் இடறல்களையும் உங்கள் வழிகளில் வைத்து, உங்களை குருடாக்கும்படி, உங்களை வஞ்சிக்கும்படி, தேவனுடைய சித்தத்தை கற்றுக்கொள்வதற்கு இது மிகக் கடினமானது என உங்களை நினைக்கப்பண்ணுவதற்கு உங்கள் மனதில் வைத்துக்கொள்ள இன்னொரு செயலாகும். இதைச் செய்ய அவனை அனுமதிக்காதீர்கள்! வேதாகமத்தை வித்தியாசமாக வாசிக்கும் ஒவ்வொருவரையும் நம்பச் செய்யவும் மேலும் அவன் நீங்கள் எதையெல்லாம் நம்புகிறீர்களோ அது சரியானது என்றும் உங்களை அவன் நம்பச் செய்வான். ஆனால் 2பேதுரு1:20-ல் நாம் "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்ற முடையது" என நினைக்கிறவர்களாயிருக்கக் கூடாது என்று சொல்கிறார். நிதானமாய்ப் பகுக்கப்பட்டதும் புரிந்துகொள்ளப்பட்டதும், இதனுடைய செய்தி ஒவ்வொருவருக்கும் ஒரே விதமானதும் ஆகும்.

வேதாகமத்தில் நமது கர்த்தர் உலகத்திற்குத் தம்மையே வெளிப்படுத்தி யிருக்கிறார். தம்முடைய வருகையை சொல்லி, அவருடைய ஜீவன் அவருடைய மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவற்றையும் சொல்லியிருக்கிறார். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, தங்களுடைய

பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் என்பது நற்செய்தியாகும். புதிய ஏற்பாட்டு சபையைக்குறித்து, அது ஆவிக்குரிய கிறிஸ்துவின் சரீரம் என்றும், சுவிசேஷத்திற்குக் (மாற்.16:16) கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் எவ்வாறு இரட்சித்து, அவர்களை தம் சபையில் சேர்க்கிறார் என்றும் சொல்லுகிறது (அப்.2.47).

தேவன் தாமே அவருடைய வார்த்தையை நாம் வாசித்துக் கற்றுக்கொள்ளவும், அதை நிதானமாய்ப் பகுத்துப்படிக்கவும், அவ்வாறே அவருடைய சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கவும் நமக்கு உதவிசெய்வாராக!

## தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது
## God`s Word Summarized

இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது
தேவனுடைய மனதை,
மனிதனுடைய நிலையை,
இரட்சிப்பின் வழியை,
விசுவாசிகளின் மகிழ்ச்சியை

இதனுடைய கோட்பாடுகள் பரிசுத்தமானவை,
இதனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவை,
இதனுடைய வரலாறுகள் உண்மையானவை,
இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை

வாசி இதை ஞானமடைய,
விசுவாசி இதை இரட்சிப்படைய,
பயிற்சிசெய் இதை பரிசுத்தமடைய.

இது கொண்டுள்ளவைகள்:
ஒளி உன்னை வழிநடத்த,
போஜனம் உன்னை போஷிக்க,
ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.

இது வழிப்போக்கனின் வரைபடம்,
புனித பயணியின் ஆதாரம்,
விமானியின் திசைகாட்டி,
படைவீரனின் வாள்,
கிறிஸ்தவனின் கதாபாத்திரம்
இங்கே
பரதீசு முன்நிலையில் வைக்கப்பட்டுள்ளது,
பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,
நகரத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய சாராம்சம்,
நம்முடைய நன்மை இதனுடைய வரிவடிவம்
தேவனுடைய மகிமை இதனுடைய முடிவு
இது
மனதை நிரப்பும்,
இதயத்தை ஆளும்,
கால்களை நடத்தும்
இதை வாசி
நிதானமாக,
அடிக்கடி,
ஜெபத்தோடு.

இது
ஒரு செல்வத்தின் சுரங்கம்,
ஒரு மகிமையின் பரதீசு,
ஒரு இனிமையின் நதி.

இது
வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது,
நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,
என்றென்றும் நினைக்கப்படும்.

இது
சம்பந்தப்படுகிறது மாபெரிய பொறுப்போடு
வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய உழைப்பிற்கு
கண்டிக்கிறது இதன் பரிசுத்தக்காரியங்களை
அசட்டைப் பண்ணுகிறவர்களை.

**The Voice of Truth International.**



பெண்கள் பகுதி

# அழிவை நோக்கி...

## *Toward Destruction...*

J.GloryArjunan



அன்பு சகோதரிகளே, இன்றைய உலகம் அழிவை நோக்கிச் செல்கிறது என்பதை எப்போதாவது சிந்தித்ததுண்டா? புறஜாதியான் கூறுகிறான் இது 'கழியுக காலம்' என்று. நாமோ இது 'கடைசி காலம்' என்கிறோம். ஆம், உண்மையிலும் உண்மை இது கடைசி காலமே! செய்தித்தாளை புரட்டினால் அங்கே சில அழிவின் சம்பவங்கள், வானொலி செய்திக்குச் செவிமடுத்தோமானால் அங்கே சில நாசச் செய்திகள், தொலைக்காட்சிப் பெட்டியின் செய்தி நேரத்திற்குக் கவனத்தைத் திருப்பினால் அங்கேயும் சில கோரச்சம்பவங்கள். இப்படி மனிதருக்கு விரோதமாக மனிதனின் செயல்பாடுகள், இயற்கைச் சீற்றங்கள், பாவத்தின் விளைவால் வரும் அழிவுகள் என அழிவுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வேதாகமும் கடைசிக்காலச் சம்பவங்கள் குறித்து தெளிவாய் விவரித்துள்ளது. எது எப்படியிருப்பினும், நோவாகாலத்தில் வாழ்ந்து வந்த மனுஷரைப் போலவே இன்றும் மனுஷன் நிர்விசாரமாகவே வாழ்கிறான். அன்பு சகோதரிகளே, நாம் எப்படி? அழிவின் பாதையில் அகந்தையாய் நடக்கிறோமா? அல்லது ஜீவனுக்குப் போகும் பாதையில் பொறுமையாய் நடந்து கொண்டிருக்கிறோமா?

நீதிமொழிகள் 16:18 கூறுகிறது, "அழிவுக்கு முன்னானது அகந்தை". சகோதரிகளாகிய நாம் இங்கு சற்று நின்று நிதானிக்க வேண்டியது அவசியம். நம்மில் ஏதேனும் அகந்தையான எண்ணம் உள்ளதா? நம்முடைய சுகபோக வாழ்வு, நம்முடைய பிள்ளைகளின் பராக்கிரமம், நம்முடைய செல்வம், சமுதாயத்தில் நம்முடைய செழுமை, இன்னும் வேறெதைக் குறித்தாவது நமக்குள் பெருமையான, அகந்தையான எண்ணமுண்டா? நம்முடைய மனமேட்டிமை நம்மை விழச்செய்யும் என வேதம் கூறுகிறது (நீதி.16:18). மேலும் "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்...." (நீதி.16:5) எனவும் வேதம் கூறுகிறது. இவையெல்லாம் எனக்குள் இல்லை என்கிறீர்களா? நல்லது. அப்படியென்றால் நீங்கள் எப்போதாவது உன் சகோதரியைக் குறித்தோ, அல்லது தோழியைக் குறித்தோ அல்லது உடனிருப்பவரைக் குறித்தோ அற்பமாக எண்ணியிருக்கிறாயா? இன்றைய உலகில் பெருமை தலைவிரித்தாடுவதோடு, மற்றவர்களை அற்பமாக எண்ணி அலட்சியம் செய்து மனமுடையச் செய்வதும் அதிகமாகக் காணப்படுகிறது. உண்மையில் இவர்களெல்லாரும் அழிவை நோக்கிச் செல்பவரே! "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10 என

இயேசு சொல்கிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, உன்னை நீயே நிதானித்து அறிந்து கொள். இப்பேர்பட்ட குணமெல்லாம், அழிவை நோக்கிச் செல்லுகின்ற உலகத்தாரின் குணம். நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள்ளிருப்பீர்களென்றால், "...... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3). பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்(1பேது5:5).

மேற்கூறியவை இருக்கப்பட்டவர்களின் மன நிலை: ஆனால் இல்லாதவர் மனநிலையோ அதிலும் மேலானதாயுள்ளது. ஆம், நவநாகரீக உலகம் ஏழ்மையில் இருப்பவர்களையும் நிம்மதியாக இருக்கவிடுவதில்லை. இப்பேர்பட்டவர்கள் தங்களின் இயலாமையை மறந்து, உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற சத்தியத்தின் சத்தத்திற்குச் செவிமடுக்காமல் ஐசுவரியவான்களாக விரும்புகிறார்கள். இவர்களைப் பார்த்து வேதம், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்"(1தீமோ.6:7) என்கிறது. மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகெட்ட பலவித இச்சைகளிலும் விழச்செய்கிறது. காரணம் ஐசுவரியவானாக வேண்டும் என்ற விருப்பம். நேற்றுவரை என்னோடே படித்தவள், வேலை பார்த்தவள், இன்றோ அடேங்கப்பா எப்பேர்பட்ட செல்வாக்கு, கார், பங்களோ, என அடிக்கிக் கொண்டே போய் மற்றவர்களைப் பார்த்து அழிவை அறுவடை செய்கிறவர்கள் இவர்கள். அன்பு சகோதரியே உலகத்தைப் பாராதே. அது உன்னை உருக்குலையப்பண்ணும். இன்று காண்கின்ற இந்த உலகம் அக்கினிக்கு இரையாகும். அழிந்து போகப்போகிற இவ்வுலகம் உன்னையும் அழித்துவிடும். "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்"(1தீமோ.6:8). "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்....."(1யோவா.2:15) ஏனெனில் "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்"(யோவா.2:17). ஆம், நாம் காண்கின்ற அனைத்தும் அழிவை நோக்கிச் செல்கிறது. நாம் அதன்பின்னே செல்லலாமா?

சில தினங்களுக்கு முன் செய்தித்தாளின் இலவச இணைப்பில் 'மிரட்டும் தண்ணீர் பஞ்சம்' என்ற தலைப்பின் கீழ் ஓர் செய்தியினை வாசித்தேன். இயற்கையெல்லாம் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை மறந்து அனுதினமும் மனிதன் இயற்கையோடு கடுமையாக போராடி புது புது செய்தியினை வெளியிட்டுக் கொண்டேயிருக்கிறான். "விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் அடிப்படையில் இனிவரும் நாட்களில் தண்ணீருக்கு கடும் பஞ்சம் ஏற்படும் என்கின்றனர். இமயலைப்பகுதியில் பனி உருகுவது அதிகமாகிறது. தற்போது ஆண்டுக்கு 10 முதல் 15 மீட்டர் உயரத்துக்குப் பனி உருகுகிறது. அந்த அளவுக்கு பனியின் அளவு அதிகரிப்பதில்லை. இது நீடித்தால் இமயமலை முழுவதுமாக பனி இல்லாத வறண்ட மலையாக மாறிவிடும். தற்போது

இமயமலையிலிருந்து உருவாகி ஓடிவரும் நதிகளும் வறண்டு விடும். அதே போல் தென்துருவத்தில் மனிதர் வாழ முடியாத அண்டார்டிகா கண்டத்திலும் பனிமலையின் அளவு குறைந்து சுமார் 3,250 ச.கி.மீ. அளவும் 200 மீட்டர் அளவு ஆழமும் கொண்ட பனி பாறைகள் உடைந்து கடலில் கலந்துள்ளது இதனால் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வெப்ப நிலை மாறுபட்டு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது என எச்சரித்துள்ளனர். காரணம் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைதான் என்கின்றனர்". இதையெல்லாம் அறியும் போது சோதோம் கொமோரா பட்டணங்களைப் பற்றிய நினைவுதான் வருகிறது. ஐயோ! அழியப் போகிறது நம்முடைய ஆஸ்திகள் என நினைத்தாளோ என்னமோ, லோத்தின் மனைவி உலகத்தைத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். அன்பு சகோதரிகளே, சற்று சிந்தியுங்கள். நீங்கள் எவைகளைக் குறித்து அகந்தை கொண்டுள்ளீர்களோ, அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. நீங்கள் எதன் மீது இச்சை கொண்டு ஐசுவரியவானாக விரும்புகிறீர்களோ அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தேமா என்பவன் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ஆவிக்குரிய நண்பன் பவுலை விட்டு பிரிந்து போனான். இன்றும் அநேகர் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து அருமையான கர்த்தருக்குப் பிரியமான சகோதர சகோதரிகளின் ஐக்கியத்தை விட்டு பிரிந்து செல்கின்றனர். கிறிஸ்துவுக்குள் மிகப்பிரியமான சகோதரியே, நீயும் இவ்வாறு இருப்பாயானால் சந்தேகமேயில்லை நீ அழிவை நோக்கிச் செல்கிறாய்!

இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" என்றார். ஆம், அழிந்து போகிற இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள். உங்களுடைய நடை, உங்களுடைய உடை, உங்களுடைய நடக்கைகள் எல்லாம் 1தீமோ.2:9-10-ல் கூறப்பட்டுள்ளபடி "..தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" என்பதற்கேற்ப அமைவதாக!

அழிவை நோக்கி செல்வதும், ஜீவனை நோக்கிச் செல்வதும் உங்கள் சாய்ஸ். இதோ மரண வழியையும் ஜீவ வழியையும் கர்த்தர் உங்கள் முன் வைக்கிறார். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் (அழிவுக்கு) போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது......ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது....." வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது. இன்னும் காலம் கடத்தாதீர். இன்றே இரட்சண்ய நாள், அழிவை நோக்கிச் செல்லும் அன்பு சகோதரியே, சற்றே உன் பாதையை மாற்றி ஜீவனுக்குள் பிரவேசிக்க முற்படு. என்றென்றும் ஒழிந்து போகாத வேத வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, இயேசுவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள் அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். நித்திய ஜீவனை அடையும் சிலாக்கியத்தையும் பெறுவாய். கர்த்தர் தாமே உன்னை தம்மிடமாய் இழுத்துக் கொள்வாராக!



# விசுவாச ஓட்டம்

-Mrs.Sheela Immanuel

**அன்பிற்குரிய சகோதரிகளுக்கு!**

அன்பர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். 1கொரி.9:24 பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை ஓட்டபந்தையத்தையும், கடலில் பயணம் செய்யும் படகிற்கும் ஒப்பிட்டு பேசப்படுகிறது. இது ஏன் இப்படி ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்று அநேக முறை சிந்தித்ததுண்டு. ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவர் தன்னை எல்லா வகையிலும் ஆயத்தப்படுத்திக்கொண்டு ஒரு இலட்சியத்தை மட்டும் நினைவில் கொண்டு ஒரே சிந்தையுடன் தனக்கு நியமிக்கப்பட்ட பாதையில் ஓடுவார். அதேபோல நாமும் எப்படி இந்த கிறிஸ்தவ ஜீவியத்தில் தொடர்ந்து ஓட வேண்டும் என்று கவனிப்போம். சகோதரிகளே அநேகமுறை நாம் கசந்து கொள்வதுண்டு. வீட்டு வேலையை முடித்து விட்டு, காலையில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு, தானும் வேலைக்கு சென்று திரும்பி, மீண்டும் வீட்டினுள் வேலை என்று சகோதரிகளுக்கு அன்றாடம் தொடர் ஓட்டமே நடைபெற்று வருகிறது. இதற்கு மத்தியில் என்ன சகோதரி கிறிஸ்தவ ஓட்டம், எங்களால் வீட்டுக்குரிய ஓட்டத்தையே சரியாக ஓடமுடியவில்லை, நாம் மாமிச வாழ்க்கை வேறு கிறிஸ்தவ வாழக்கை வேறு என்று எண்ணுவோமானால் இப்படித்தான் சிந்திபோம். கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வு தினமும் வேண்டும் என்பதற்காகவே பவுல் இங்கு 2கொரி.9:24,25-ல் இந்த உதாரணத்தை கொடுக்கிறார். சரி சகோதரி, பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் என்று சொன்னீர்களே, இது என்ன என்று கேட்பது புரிகிறது. கவனிப்போம், முதலாவது இந்த பந்தயத்தில் ஓடுபவர்கள் முழுமனதை (கவனத்தை) வைக்கவேண்டும். இப்படிப்பட்ட உலக பிரகாரமான ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்கள் அதிக நாட்கள் அதற்காக கடுமையான பயிற்சி செய்து தங்கள் சரீரங்களை வருத்திக் கொண்டு எப்படியாயினும் வெற்றி பெற வேண்டும் என்ற சிந்தையுடன் ஓடுவார். அதுபோல ஜீவ கீரிடம் நமக்காக வைக்கப்பட்டுள்ளது. 2தீமோ.4:8 அதைப் பெற நமக்கு முதலில் ஏக சிந்தை அவசியம்.

**இரண்டாவதாக,** ஓடுகிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட முடியாது. அவர்களுக்குகென்று சட்டங்கள் உண்டு. 2தீமோ.2;5 அதுபோல நமக்கு கொடுக்கப்பட்டுள்ள சட்டம் யோவான் 15:20-ல் இயேசு சொன்னதுபோல நாம் அவருடைய அன்பிலே (இயேசுவிலே) நிலைத்திருக்க முடியும்.

**மூன்றாவது** ஓடுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் நம்பிக்கை வெற்றி பெற்ற பின் அவர்களுக்கு பரிசு, அதன் பின் தொடர்ச்சியாக கிடைக்க கூடிய அநேக வெகுமதியான நாட்கள். அவர்கள் வெற்றி பெற்றபின் அடையபோவது முற்றிலும் உலகத்துக்குரியது. ஆனால் தேவன் நமக்கு கொடுக்கும் நம்பிக்கை 2தீமோ.4:8 நித்தியத்திற்குரியது. இது இறுதியாய் நாம் அடையபோவது. ஆனால் நம்மில் அநேகர் ஒவ்வொரு நாளும் ஓட வேண்டிய விசுவாச வாழ்க்கையிலேயே தவறிவிடுகிறோம். இது என்ன அவ்வளவு முக்கியமா? எனக்கு தேவன் கூறின நித்திய ஜீவன் இவையெல்லாம் தெரியும். எப்படியாவது வாழ்ந்து பெற வேண்டியதை பெற்றுவிடுவேன் என்று எண்ணுகின்றனர்.

சகோதரிகளே சிந்தியுங்கள். நம் அன்றாட வாழ்க்கை ஓட்டம் நெடுநாள் வரை நம்மை அழைத்து செல்ல கூடியது. அதற்கு முதலில் நாம் ஜெப வாஞ்சையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இயேசு மத்தேயு6:9-12 இவ்வசனங்களில் சீஷர்களுக்கு ஜெபம் செய்ய வேண்டிய விதம் என்று கற்பிக்கிறார். சீஷர்களின் ஊழிய பாதையில் முதலாவது

ஜெப வாழ்க்கை இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் சந்திக்கப்போகும் இன்னல்கள் பேரிடிகளைத் தாங்கிக்கொள்ள எப்போதும் பிதாவின் கிருபை தேவை. அதற்கு தினமும் அவரிடம் பேச வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

அதுபோல தொடர்ச்சியாக ஒரு நாள் முழுவதும் நாம் எதை செய்தாலும் அதை தேவனுக்கு பிரியமானதாக செய்ய முயற்சி செய்ய வேண்டும். சரி சகோதரி எல்லாம் சரியாத்தான் இருக்கு. இங்கு தொடர்ச்சியாக தேவனுக்கு பிரியமா ஒரு நாள் முழுக்க ஓடணும் என்று சொல்றீங்களே, அது என்ன? சகோதரிகளே! கொஞ்சம் நேரம் எடுத்து எனக்காக கொலோசெயர் 3:12-25-யை வாசியுங்கள். இங்கே ஒரு பட்டியல் இடப்பட்டுள்ளது. இந்த வசனங்களை அன்றாடம் செய்ய பழகினோமானால் போதும். உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவர் கொடுக்கும் மாத்திரைகள் மட்டும் சாப்பிட்டு நம் உடல் நிலையில் பெருத்த மாற்றத்தை கொண்டு வர முடியாது.

சகோதரியே! ஒரு குடும்பத்தில் தலைவியின் பங்கு மிக முக்கியமானது. அதினால் மற்ற பெண்களுக்கு ஒன்றுமில்லை என்று பொருள் அல்ல. அனைவருமே மிக முக்கியமானவர்கள். நாம் ஓட வேண்டும் என நினைக்கும்போது அதில் தேவன் ஆசீர்வாதத்தையும் உடன் வைத்து தான் அழைக்கிறார். பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.1. எப்போதாகிலும் காலை ஜெபத்தை தவறவிட்டதுண்டா? அநேக நாட்கள் அதைப்பற்றி சிந்தித்ததே கிடையாது.2. வேத வாசிப்பை, அதையும் கூட...3. ஒரு நாளில் பிரச்சனைகள் என்று சந்திக்க கூடியவற்றை தேவவசனத்தினால் எதிர்கொண்டதுண்டா? யோசிக்க வேண்டிய விஷயம்.4. பிள்ளைகள் தேவனுக்கு பிரியமாய் வாழ வேண்டும் என்று தினமும் உணர்த்தியதுண்டா?5. கணவரின் அன்பை பெற தேவன் கூறும் கொலோ.3:18-ன்படி கீழ்ப்படிந்ததுண்டா? 2தீமோ.4:7-ல் பவுல் சொல்வது போல் ஓட்டத்தை முடிப்பது எளிது அல்ல. போராடித்தான் பெற்றாக வேண்டும். குறுக்கு வழியில் அல்ல. நல்ல போராட்டம் ஆரோக்கியமான போராட்டம் அதை செய்து விசுவாசத்தை காத்துக்கொள்ள வேண்டும். இது அறிவுரை அல்ல, அன்பின் செய்தி என் அன்பு சகோதரிக்கு! -நன்றி திருமறைநேரம் ஜனவரி 2012 இதழில் வெளிவந்தவை.

## சபை அங்கத்தின் சமாசாரம்

The matter of Church Membership

**கேள்வி:** சபை அங்கத்தினனாய் மாறாமல் நான் கிறிஸ்துவின் சீஷனாக இருக்க முடியுமா? *-John Thiesen*

இல்லை, இது இயலாதது. கிறிஸ்து தம்சபையிலிருந்து பிரிந்திருக்க முடியாது என்பதே இதன் காரணம். இது "அவருடைய சரீரம்" அவருடைய நிறைவாகிய சபை" (எபே.1:23).

தேவன் உலகமுண்டானது முதற்கொண்டே சபையைத் திட்டம்பண்ணினார். அவர் சபையாகிய **ஒரே சரீரத்தில்** யூதர்களையும் புறஜாதிகளையும் இரட்சிக்க திட்டமிட்டார் (எபே.1:23).

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என வேதாகமம் கூறுகிறது (அப்.2:47). சபையானது கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களாலும் உருவாக்கப்பட்டது (அப்.2:38,41,47)

சபையல்ல, கிறிஸ்துவே இரட்சிக்கின்றார் என்பது உண்மையாக இருந்தபோதிலும், **நாம் சபைக்கு வெளியே இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியாது,** ஏனென்றால் இது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது! கர்த்தர் நம்மை இரட்சிக்கிற போது, நாம் தாமாகவே அவருடைய சபையாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மாறுகின்றோம்.

*-The Voice Of Truth International*

பெண்கள் பகுதி

# பண்டிகைகளின் நோக்கம்
## The Purpose of the Feasts

*-Betty*



பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. ‘‘ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்’’ (1கொரி.11:26).

### கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

‘‘வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, ‘‘பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்....’’ (லூக். 22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

‘‘நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்’’ (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் "…..அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினை தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது…"(மத்.26:26) என்றார்.இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள்

ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) “இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்” (லூக்.22:19).

(2) “ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து…” (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே பிரச்சனை ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர். இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம், அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) “எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ….. அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ….. தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்” (1கொரி.11:28,26).

(4) “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ….” (யோவா.6:54).

(5) “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு “சடங்காக” நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**



# யார் அவர்களுக்குச் சொல்லுவார்?

## Who Will Tell Them?

*Jack W.Carter*

பல வருடங்களுக்கு முன் நான் என்னுடைய அனுதின வேதவாசிப்பில் ஈடுபட்டிருக்கையில், நான் ஒரு தொடர்ச்சியான நிலை விடுபட்டிருப்பதைக் கவனித்தேன், அதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

நான் மோசேக்கும் அதன்பின் யோசுவாவுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய போதனைகள் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன். தேவன் அவர்களுக்கென்று நிறைவேற்றியிருந்த அனைத்தும், அவர்கள் தங்களுடைய மனதிலும் தங்களுடைய இருதயங்களிலும் தம்முடைய வார்த்தைகளை காத்துக்கொள்ளும்படி தேவன் அவர்களை அழைத்தார். அத்தோடு வரப்போகின்ற தம்முடைய ஜனத்தின் சந்ததியாருக்கென தம்முடைய ஜனம் மறந்து போகாமல் அநுசரிக்கும்படியான சில கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி அவர்களை அழைத்தார்.

எளிய கூற்றில் கூறுவோமானால், மொத்தத்தில் அவருடைய போதனைகள் “உங்களுடைய பிள்ளைகளிடத்தில் என்னைப் பற்றி பேசு, ஒவ்வொரு நாளும் நான் அவர்களுடைய தேவன் என்றும் நான் அவர்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து காக்கிறவர் என்றும் அவர்களுக்குக் கற்றுக்கொடு” என அறிவுறுத்துகிறதாயிருக்கிறது. “எனக்கும் என்னுடைய கற்பனைகளுக்கும் கனத்தைச் செலுத்தும்படி அவர்களுக்குச் சொல்லு. “ஒவ்வொருநாளும் அவர்களுக்கு இதைப் பற்றிச் சொல்லு”. “நீங்கள் எழுந்திருக்கும் போதும், தூங்கும்படி படுக்கைக்குச் செல்லும் போதும், வழியில் அவர்களோடு நடந்து செல்லும் போதும் இதைப்பற்றி அவர்களுக்குச் சொல்லு” வேறு வார்த்தையில் கூறினால், “என்னைப் பற்றி அவர்களுக்குச் சொல்லும் ஒரு வாய்ப்பினையும் இழந்து விடாதே” என்பதாகும்.

வருங்கால சந்ததியினர் உறுதியாக நிலைத்திருந்து தேவனோடு நெருங்கி இருக்கும்படிக்கு தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்திருந்தார். பரிதாபம், அதற்கடுத்த சந்ததியினர் தேவனைப் பற்றி அறிவிக்கப்படாததாயிருந்து தேவனுக்கு ஏற்காதபடி மாத்திரமல்ல எந்த ஒரு சாதாரண நிலையிலும் இழிவான துன்மார்க்கமான வாழ்வு வாழ ஆரம்பித்தனர்.

ஜனங்கள் ஏன் இதைச் செய்கின்றனர்? தேவனையும் நமக்கென்று அவர் கொடுத்த போதனைகளையும் அறியாதவர்களாக வளர நம்முடைய பிள்ளைகளை நாம் ஏன் விட்டு விடுகிறோம்? தேவனைப் பற்றி கற்பிக்கப்படாத பிள்ளைகள் தேவனுக்கு தங்களுடைய முதுகைக் காண்பிப்பார்களென்பதை பல உதாரணங்கள் மூலம் நாம் நன்றாய் அறிந்துள்ள போதும் நாம் ஏன் இவ்வாறாகச் செய்கிறோம்?

பிரியமான பெற்றோர்களே, தேவனோடு உறவுவைத்துக் கொள்ளும்படி உங்களுடைய பிள்ளைகளை உருவாக்குவது மூப்பர்கள், பிரசங்கிமார்கள் அல்லது வேதபாட வகுப்பு ஆசிரியர் போன்றவரின் பொறுப்பல்ல..... இது உங்களுடைய பொறுப்பு. ஒரு நாள் கூட தேவனைப் பற்றி உங்களுடைய பிள்ளைகளுக்குப் போதிக்காமலிருந்துவிடாதீர்கள்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு போதிக்காவிட்டால், அவர்கள் ஒருவருக்கும் செவிசாய்க்கமாட்டார்கள் என்பது அதிக நிச்சயம். நீங்கள் உங்களுடைய அக்கறையற்ற நிலையினை தேவனிடத்தில் மெய்ப்பிப்பீர்களானால், அவர்கள் அதே போல் மிக அதிகமாகவே அதே காரியத்தைச் செய்வார்கள்.

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி *TWOC NO.4* நவம்பர் 2024**

**வாசகருக்கான நற்செய்தி**

1. அவர் (இயேசு) முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து... எச்செய்தியில் வாசிக்கிறோம்?
2. கொஞ்சம் நேரம் எடுத்து எனக்காக கொலோசெயர் 3:12-25 ஐ வாசியுங்கள் என்று எந்த ஆசிரியர் கூறுகிறார்?
3. "அவருடைய சரீரம்" என்பது எதைக்குறிக்கிறதாக இருக்கிறது?
4. "வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமுடையதாக" என நினைக்கக் கூடாது என குறிப்பிடும் ஆசிரியர் யார்?
5. "என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எந்த செய்தியில் வாசிக்கிறோம்?
6. "உலகமும் அதின் இச்சையும் ..." என்னவாகும்?
7. உன் பிள்ளைகளிடத்தில் என்னைப் (தேவனைப்) பற்றி பேசு என்று அறிவுறுத்தும் செய்தி எது?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம் மாதம் 25 -ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் அடுத்தமாதம் 10ம் தேதிக்குள் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும்.

செப்டம்பர் மாத வேத அறிவுப்போட்டி கேள்வியில் 10 வது கேள்வி தவறாக பிரின்ட் ஆகிவிட்டது அதை சுட்டிக்காட்டிய அனைத்து வாசகர்களுக்கும் நன்றி சொல்லுகிறோம்.

ஆசிரியர்.

***TWOC NO.2*** கேள்விகளுக்கு சரியான பதில் எழுதி பரிசுபெறுகிறவர்கள் மொத்தம் 29 பேர். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

- சென்றமாத சென்னை ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- ஊழியத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு மற்றும்ஆந்திரா சகோதர சகோதரிகளுக்காக...
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக...

**ஜெபியுங்கள்**



# நடப்புச் செய்திகள்

■ சென்னை - திருச்சி நெடுஞ்சாலையை அதிவேக 8 வழிச்சாலையாக்க தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

■ 20 லிட்டர் குடிநீர் கேன், சைக்கிள், பயிற்சி நோட்டுப்புத்தகங்கள் மீதான ஜிஎஸ்டியை 5% ஆக குறைக்க குழு அமைக்கப்பட்டுள்ளது

■ சூடானில் 31 லட்சம் மக்களுக்கு காலரா பரவுவதற்கான அபாயம் இருப்பதாக UNICEF அமைப்பு தெரிவித்துள்ளது

நன்றி - NewsPoint

## வேத அறிவுப்போட்டி எண் 288 ன் விடைகள்

1. கூடாது - லேவி.22:12
2. 40 - எபி.3:9
3. 70 - எண்.11:16
4. தேவனுக்கு - யாக்.2:19
5. 40 - உபா.25:3
6. சாராளுக்கு - 1பேது.3:6
7. ஆபிரகாமை - யோசு.24:3
8. பேதுரு - 2பேது.3:1
9. இப்சான் - நியா.12:10
10. யோவான் - 1யோவா.4:6

## வேத அறிவுப்போட்டி எண் 289 ன் விடைகள்

1. சாமுவேல் - 1சாமு.2:18
2. கர்த்தருக்கும் கிறிஸ்துவுக்குமுரிய - வெளி.11:15
3. மீகாள் - 2சாமு.6:16
4. ஒப்புரவாகவேண்டும் - மத்.5:23,24
5. 4 வருஷம் 2 மாதம் - 1இரா.6:1
6. ஆம் - மாற்.14:3
7. சூனேமியாள் - 2இரா.4:9,10
8. எடுத்துக்கொள்ளப்படும் - லூக்.8:18
9. ஏமான், ஆசாப், ஏத்தான் - 1நாளா.15:19
10. நம் ஆண்டவர் இயேசு - யோவா.16:20

## வேத அறிவுப்போட்டி எண் 288 ல் வெற்றிபெற்றவர்கள்

1. K.ராணிமூர்த்தி - ஏர்வாடி
2. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
3. Mrs.ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
4. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
5. S.செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
6. R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
7. S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
8. S.சாந்தக்குமாரி - நாசரேத்
9. Mrs.ஜெயாபாணிஜெபராஜ்- மேற்கு தாம்பரம்
10. P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
11. S.ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
12. Mrs.பியூலாஜேசுரத்தினம் - புதுச்சேரி
13. S.ஓசியா ஹரிராகவன் - சென்னை
14. E.அதிசயம் - பனைகுடி
15. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
16. Mrs.ஃபுளோரன்ஸ் சீத்தர் - சென்னை
17. Mrs.ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
18. Mrs.பாலின்மார்ட்டின் - சிவகங்கை
19. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
20. E. ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
21. Mrs.அன்புக்கமலம் - சிவகங்கை
22. Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
23. Mrs.பாலின் டேனியேல் - சென்னை
24. Mrs.சந்திராஆல்பெட் - திருநெல்வேலி
25. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
26. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
27. J.பிச்சை - விருதுநகர்
28. Mrs.ஜான்சி - ஆனைமலை
29. Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
30. K.S.மாணிக்கவாசகம் - திருசசி
31. A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
32. V.C.ரூபவல்யா - தூத்துக்குடி
33. N.வசந்தகுமாரி - வத்தலக்குண்டு
34. Mrs.ஜெபக்குட்டி மோசஸ் - திருநெல்வேலி

## வேத அறிவுப்போட்டி எண் 289 ல் வெற்றிபெற்றவர்கள்

1. D.அன்புகமலம் - கோவை
2. Mrs.ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
3. Mrs.பாலின்டேனியல் - சென்னை
4. G.லலிதாஎலிசபெத் - புதுச்சேரி
5. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
6. Mrs.ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
7. Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
8. Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
9. K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
10. S.அசோக்பிரின்ஸ் - தூத்துக்குடி
11. J.ராஜகுமாரி - விருதுநகர்
12. J.பிச்சை - விருதுநகர்
13. A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
14. Mrs. பாலின்மார்ட்டின் - சிவகங்கை
15. Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
16. Mrs.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
17. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
18. Mrs.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
19. V.C.ரூபவல்யா - தூத்துக்குடி
20. N.வசந்த குமாரி - வத்தலக்குண்டு
21. Mrs.பியூலாஜேசுரத்தினம் - புதுச்சேரி
22. S.செல்வராஜ் - திருநெல்வேலி
23. Mrs.கிறிஸ்டோபல் - கோவை
24. E.அதிசயம் - பனைகுடி
25. Mrs.சாந்தகுமாரி - நாசரேத்
26. Mrs.ஃபுளோரன்ஸ் சீத்தர் - சென்னை
27. Mrs.ஜெயாபாணிஜெபராஜ்- மேற்கு தாம்பரம்
28. S.செல்வராஜ் - தூத்துக்குடி
29. A.அன்னாள் ஜெபக்கனி - தூத்துக்குடி
30. Mrs.சந்திராஆல்பெட் - திருநெல்வேலி
31. S.ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
32. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
33. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
34. R.அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
35. J.ஜான்சி - ஆனைமலை
36. R.பாரதி - கோபி
37. Mrs.ஜான்சி செல்லத்துரை - திருச்சி
38. Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
39. M.குமார்- திருப்பதி (A.P)
40. Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
41. Mrs.ஜெபக்குட்டி மோசஸ் - திருநெல்வேலி
42. பெயர் எழுத மறந்தவர்
43. பெயர் எழுத மறந்தவர்
44. R.ஞானசிரோன்மணி - சமயநல்லூர்

# பேலியாளின் மக்கள்

சிறுவர் பகுதி

**வேத பகுதி: 1சாமுவேல் 2:12–17**



16

ஏலியின் குமாரரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலீஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள் கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**

**“மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்” (நீதி.11:20).**

## வேத அறிவுப் போட்டி எண்: 291

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தர் எவனை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவார்?
2. நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. பாவியின் ஆஸ்தியோ யாருக்காகச் சேர்த்துவைக்கப்படும்?
4. தேவன் எவரை, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்?
5. அதிக படிப்பு உடலுக்கு இளைப்பா?
6. எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன் என எந்த சபைக்கு பவுல் எழுதினான்?
7. நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
8. அரிஸ்தர்க்கு பவுலோடு காவலில் இருந்தானா?
9. இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் எந்த தீர்க்கதரிசியைக் கொண்டுபேசினார்?
10. எந்த சபையிலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்தது?

## வேதாகம ஆய்வு... 75

**தீமோத்தேயு - Timothy**

1. **தீமோத்தேயு என்றால் தேவ மேன்மை என்று அர்த்தம்**
2. **தகப்பன் கிரேக்கன் தாய் யூத ஸ்திரீ**
3. **விசுவசத்தில் உத்தம குமாரன் – 1தீமோ.1:2**
4. **பவுலின் உடன் வேலையாள் – ரோம.16:21**
5. **பவுலோடு ரோமாபுரியில் சிறையிலிருந்தவன் – எபி.13:23**



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
November 2024










சென்னை திருவல்லிக்கேணியில் இரண்டு நாட்கள் நடைபெற்ற WEB SCHOOL லில் கலந்துகொண்ட வேதமாணவர்களும் ஆசிரியர்களும் (தமிழ்நாடு மற்றும் ஆந்திரா)

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம்

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan